யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
## Term Examination, March - 2016

| தரம் :- 12 (2017) | சித்திரக்கலை - I | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் : ...........................

அறிவுறுத்தல்கள் :
- ❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி - I
- ➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

பகுதி - II
- ➢ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- ➢ ஒரு உப பகுதியிலிருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.
- ❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி – I

❖ கீழே தரப்பட்டுள்ள A, B, C, D, E ஆகிய படங்களை அவதானித்து 1 - 5 வரையான வினாக்களுக்குப் பொருத்தமான விடையை தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் இடுக.

agaram.lk


A


B


C


D


E

(01) A எழுத்தால் காட்டப்பட்டும் ஓவியப் பகுதியானது
1) கிரேக்க மேதைகளான பிளேட்டோ அரிஸ்ரோட்டல்
2) கிரேக்க மேதைகளான பிளேட்டோ அரிஸ்ரோட்டல்
3) கிரேக்க மேதைகளான பிளேட்டோ, சோக்கிரடீஸ்
4) கிரேக்க மேதைகளான அரிஸ்ரோட்டில், சோக்கிரட்டீஸ்
5) கிரேக்க மேதைகளான பைதகரஸ், பிளேட்டோ
கிரேக்க மேதைகளான அரிஸ்ரோட்டில், பைதகரஸ்
(...........)

(02) B எழுத்தினால் காட்டப்படும் ஓவியம் மரபு வாதிகளினால் நிராகரிக்கப்பட்ட காரணம்
1) புதிய சம்பிரதாய மரபில் வரையப்பட்டமை
2) உருவங்களில் செழுமைத்தன்மை அற்றதாக காணப்பட்டமை
3) ஓவியபரிமாண உத்திகள் பேணப்படாமை
4) தலைப்பிற்கு பொருத்தமற்ற விதத்திலும் காமத்தை தூண்டுவதாகவும் அமைந்துள்ளமை
5) வர்ணப்பிரயோக உத்தியில் வர்ணத்தை ஓவிய மேற்பரப்பில் கலந்தமை.
(...........)

(03) C என்ற எழுத்தினால் காட்டப்படும் ஓவியத்தின் சிறப்பாக கருதப்படுவது

1) கிறிஸ்தவ கதையினை சிறப்பாக காட்டியுள்ளமை
2) மனித உருவங்களில் மெய்நிலை சிறப்பாக காட்டப்பட்டுள்ளமை
3) தொனிப்பொருளில் இடம்பெறும் உருவங்களையும், பின்னணியையும் இலங்கைக்குரியதாக சித்தரித்தமை
4) தூரதரிசன நுட்பத்தை சிறப்பாக காட்டியமை
5) வரையறுக்கப்பட்ட ஒரு சில வர்ணங்கள் பயன்படுத்தியமை மூலம் சிகிரிய ஓவிய சாயலை வெளிப்படுத்தியமை

(...........)

(04) D என்ற எழுத்தினால் காட்டப்படும் ஓவியத்தினூடாக வெளிப்படுத்தப்படும் உணர்வு

1) கோபம் 2) பயம் 3) சோகம்
4) மகிழ்ச்சி 5) சோம்பல்

(...........)

(05) E என்ற எழுத்தினால் காட்டப்படும் ஓவியத்தின் படைப்பாளி

1) சோளியஸ்மெண்டிஸ் 2) M. சார்ரிலிஸ் 3) ஜோர்ச்கீட்
4) சோமபத்து வித்தியாபதி 5) P. மஞ்சு ஸ்ரீ

(...........)

(06) ஏ.சி.ஜீ.எஸ் அமரசேகர

1) சமயத்தொனிப்பொருட்களைக் கொண்ட பல சித்திரங்களை நிர்மாணித்த கலைஞர்
2) சாஸ்திர ரீதியான கோட்பாடுகளைப் பின்பற்றி யதார்த்தவாத சித்திரங்களை வரைந்த கலைஞர்
3) கற்பனை சித்திரிப்பு உணர்ச்சி வெளிப்பாட்டு நுட்பமுறையையும் விரும்பிய சித்திரக்கலைஞர்
4) எண்ணெய் வர்ணத்தால் உயிரோவியச் சித்திரங்களை மாத்திரம் நிர்மாணித்த சித்திரக் கலைஞர்
5) நீர்வர்ணச் சித்திரங்களில் மாத்திரம் தனது திறனை வெளிப்படுத்திய கலைஞர் (...........)

(07) லியனாடோடாவின்சியின் நிர்மாணங்களாவன

1) மொனலிசா, அல்பா மடோனா, கடைசி இராப்போசனம்
2) கடைசி இராப்போசனம், மொனலிசா, கற்பாறையின் மீது தேவமாதா
3) தேவமாதாவும் காகேஷன் மலர், ஆதாமைப் படைத்தல், அதென்ஸ் பாடசாலை
4) கற்பாறையின் மீது தேவமாதா, தேவமாதாவும் கானேஷன்மலர், அதென்ஸ் பாடசாலை
5) கடைசித் தீர்ப்பு, மொனோலீசா, லெடா

(...........)

(08) எம்.சார்லிஸ்

1) மாளிகாகந்த பிரிவெனையில் கலையைக் கற்றவர்
2) நடைமுறையில் இருந்த விகாரைச் சித்திரக் கலைமரபுகள் வளர்ச்சியடைவதற்கு கைகொடுத்த கலைஞர்
3) லித்தோ அச்சு சித்திரத்தின் மூலம், பௌத்த சமய எழுச்சியை ஏற்படுத்திய கலைஞர்
4) தேசிய சித்திரக்கலையை வெளிநாட்டுக் கலைமரபுகளில் இருந்து விடுவித்த கலைஞர்
5) கண்டி, சுவரோவிய மரபுக்கு புத்துயிர்ப்பு வழங்கிய கலைஞர்

(...........)

(09) எகிப்தில் நிருமாணிக்கப்பட்ட மிக விசாலமான ஸ்பின்க்ஸ் வடிவம்

1) பேரர்களின் வணக்கத்திற்கு உரிய தெய்வச்சிலை
2) கீசாவில் கல்லில் பொழியப்பட்ட பேரர் வடிவம்
3) மனித தலையையும் சிங்க உடலினையும் கொண்ட கற்பனை சிலையாகும்.
4) "கா" ஆத்மாவின் பொருட்டு பூஜை வழிபாடு செய்வதற்கு நிருமாணிக்கப்பட்ட சிலை ஆகும்.
5) மாந்திரீய தேவைக்காக உருவாக்கப்பட்ட சிலை ஆகும். (...........)



agaram.lk
Scanned with CamScanner

இலங்கையின் கலாசாரச் சொத்தாகக் கருதப்படும் இடத்துடன் தொடர்புபட்ட சித்திரங்களின் வர்ணம் பழுதடைந்துபோவதாக அண்மையில் செய்திகள் வெளியாயின. இந்த இடம்

1) முல்கிரிகலை
2) வெஸ்சகிரிய
3) சிகிரியா
4) திவங்காலயம்
5) களனிவிகாரை

(............)

) சுவர்க்கம், மனித உலகம், நரகம் ஆகியவற்றைச் சித்திரிக்கின்ற உரோமில் உள்ள தேவாலயத்தில் காணப்படும் விசாலமான பிரஸ்கோ சித்திரத்தை வரைந்தவர்

1) லியனாடோடாவின்சி
2) மைக்கல் அஞ்சலோ
3) ரபாயல்
4) டேவிற்பெயின்டர்
5) வின்சட்வான்கோ

(............)

3) பரவுருப அலங்காரம் செய்யப்பட வேண்டிய உற்பத்திப் பொருள்

1) சேலைக்கரை
2) கம்பளம்
3) சீத்தைதுணி
4) கைவிசிறி
5) நடைபிரம்பு கைபிடி

(............)

(24) ஆகாய தூரநோக்கு என்பது

1) கடலின் ஆழப்பகுதியில் உள்ள கப்பலில் இருந்து தெரியும் தூரக்காட்சி
2) கீழிருந்து மலையில் உச்சியில் தெரியும் தூரக்காட்சி
3) புகையிரதத் தண்டவாளத்தை நோக்கும்போது தெரியும் தூரக்காட்சி
4) தாழ்வாக பறக்கும் விமானத்தில் இருந்து கீழ்நோக்கி தெரியும் தூரக்காட்சி
5) படுத்திருந்து ஆகாயத்தை பார்க்கும்போது தெரியும் தூரக்காட்சி

(............)

(25) மாமத் யானையின் உருவம் வரையப்பட்டுள்ள வரலாற்றுக்கு முற்பட்டகால குகை

1) லாஸ்கோ
2) அல்ராமீரா
3) பொன்டிதகோடேம
4) நீயோ
5) கோகுல்

(............)

❖ 26 – 30 வரையான வினாக்களுக்கு தரப்படும் படங்களைப் பயன்படுத்தி மிகப் பொருத்தமான விடையை தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.


A


B


C


D


E

agaram.lk



Scanned with CamScanner

(26) எழுத்து "A" மூலம் காட்டப்படும் செதுக்கல் ஆக்கப்பட்ட ஊடகம்

1) கருங்கல்
2) செங்கல்
3) மரம்
4) சலவைக்கல்
5) களிமண் (.........)

(27) எழுத்து "B" இனால் காட்டப்பட்டிருக்கும் கலைப்படைப்பு காணப்படும் நாகரீகத்திற்குரிய நாடு

1) இந்தியா
2) இலங்கை
3) கிரேக்கம்
4) எகிப்து
5) உரோம் (.........)

(28) அமராவதி கலைமரபிற்குரிய சிற்பம் காட்டும் எழுத்து

1) B
2) A
3) D
4) E
5) C (.........)

(29) பல்லவ கலைமரபுகளை வெளிப்படுத்தும் கலைப்படைப்புக்களைக் குறிக்கும் எழுத்துக்கள்

1) AB
2) CD
3) AE
4) AC
5) DB (.........)

(30) நீரும் நெருப்புமாக குறியீடுபடுத்தப்படும் சிற்பம்

1) A
2) B
3) C
4) D
5) E (.........)

(31) சோளியஸ் மென்டிஸ் வரைந்த ஓவியங்கள் காணப்படும் இடங்கள்

1) களனிவிகாரை, மத்தேபொல ரணஸகல்ல, உடுபத்தலாவதவபீட விகாரை
2) மத்தேபொல, கோதமிவிகாரை, களனிவிகாரை, அபயகிரிவிகாரை
3) அபயகிரி, மத்தேபொல, ஜேதவனராமய, ருவான வெலிசாய
4) உடுபத்தலாவ, தவபிடவிகாரை, தூபராம, அபயகிரி, ரணஸ்கல்ல
5) களனி, கோர்தமி, அபயகிரி, தூபராம (.........)



agaram.lk
Scanned with CamScanner

(10) பாதுகாப்பு, சௌபாக்கியம், செல்வத்தைப் பாதுகாத்தல் போன்ற எண்ணக்கருக்களை குறியீடாகக் கொண்ட பழமையான செதுக்கல் ஆனது
1) சந்திரவட்டக்கல் செதுக்கல்
2) காவற்கல் செதுக்கல்
3) கைப்பிடிச் செதுக்கல்
4) மகரதோரணச் செதுக்கல்
5) வாகல்கட செதுக்கல்
(............)


(11) கி.பி 4 ஆம் நூற்றாண்டில் மகாசேன மன்னனால் கட்டுவிக்கப்பட்ட சமாதி நிலையில் அமர்ந்து இருக்கும் சிலை
1) அனுராதபுரக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஒரேயொரு இருந்த நிலை புத்தர்சிலையாகும்
2) அபயகிரி விகாரைச் சூழலில் காணப்படும் சமாதி புத்தர்சிலையாகும்
3) கொழும்பு நூதனசாலையில் காணக்கூடிய தொழுவில் புத்தர்சிலையாகும்
4) அனுராதபுர புனித பிரேதத்திற்கு அண்மையில் அமைந்துள்ள பன்குலிய புத்தர்சிலையாகும்
5) மகாஇலுப்பலாமையில் பெறப்பட்ட பத்மாசன புத்தசிலையாகும்.
(............)

(12) பேராசிரியர் பரணவிதான அவர்களின் கருத்துப்படி சிகிரியாக ஓவியங்கள் மூலம் வெளிப்படுத்தப்படுவது
1) பிதுரங்கல விகாரைக்கு பூசை செய்யச் செல்லும் அரசனின் மனைவிமாராவர்.
2) காசியப்ப மன்னனின் அந்தப்புர மனைவிமாராவர்.
3) காசியப்ப மன்னனின் மகள்மாரான போதி, உத்பலவன்னா ஆகியோராவர்.
4) மின்சாரம் என்னும் பெண்களும் முகில்கள் என்னும் பெண்களுமாவர்
5) நீரில் விளையாடும் அரசியும், அந்தப்புறப் பெண்களுமாவர்
(............)


(13) மைக்கல் ஆஞ்சலோவால் சிஸ்டைன் இறைபீடத்தின் பலிபீடத்துக்குப் பின்னாலுள்ள சுவரில் வரையப்பெற்ற விசேடமான பிரெஸ்கோத்திரத்தின் மூலம்.
1) இறுதித் தீர்ப்பு சித்தரிக்கப்படுகின்றது.
2) உலகதோற்றம் பற்றிய கதை சித்தரிக்கப்படுகின்றது.
3) இறுதி இராப்போசனம் சித்தரிக்கப்படுகின்றது.
4) ஆதாம் படைக்கப்பட்டமை சித்தரிக்கப்படுகின்றது.
5) சூரியன் மற்றும் சந்திரனை இயக்கம் பெறச் செய்தல் சித்தரிக்கப்படுகின்றது.
(............)

agaram.lk

(14) 
வாளி ஒன்றின் பூரணமற்ற கோட்டு வரைபு ஒன்று இங்கே காட்டப் பட்டுள்ளது. இங்கு மேற்பகுதியைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான கோட்டு வரைபைத் தெரிவு செய்க.


1) 2) 3) 4) 5)
(............)

(15) மூல நிறங்களையும் அதிலிருந்து துணை நிறங்களையும் உண்டாக்கும் விதத்தையும் காட்டும் வரிவடிவம் இங்கு காட்டப்பட்டுள்ளது. இதில் A, B, C ஆகிய இடங்களில் இடப்பட வேண்டிய நிறங்கள்




1) A செம்மஞ்சள் B நீலம் C மஞ்சள்
2) A நீலம் B செம்மஞ்சள் C மஞ்சள்
3) A செம்மஞ்சள் B மஞ்சள் C நீலம்
4) A நீலம் B மஞ்சள் C செம்மஞ்சள்
5) A செம்மஞ்சள் B மஞ்சள் C நீலம்
(............)


Scanned with CamScanner


(16) அவுக்கண புத்தசிலையின் தலையில் இணைக்கப்பட்டுள்ள அலங்காரம்



1) 2) 3) 4) 5)

(..........)

(17) கீழ் காணப்படும் படங்கள் ஐந்தையும் நன்றாக அவதானித்து சரியான விடையின் கீழ் கோடிடுக.



K L M N O

ஒரு பக்கம் திறந்துள்ள 5 பெட்டிகள் கண்மட்டத்தின் கீழ் உள்ள அதாரத்தின் மீது வைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சரியான துரதரிசனமும், கண்மட்டத்தில் மிகக் கீழாக இருப்பதும் கூடிய பக்கங்களைக் காட்டுகின்றதுமான படத்தைத் தெரிவு செய்க.

1) K 2) L 3) M 4) N 5) O

(..........)

(18) கருத்துவெளிப்பாட்டுச் சித்திர ஒழுங்கமைப்பின் மிக முக்கியமான அங்கம்

1) வெளிப்படுத்தப்படும் மனித உருவங்கள் இயற்கைத் தன்மையினதாக அமைதலாகும்.
2) கருத்தும் பாவமும் வெளிப்படுதலாகும்
3) தளம் முழுமையாக நிறைந்து காணப்படும் விதத்தில் வெளிப்பாட்டின் கூறுகளைக் கையாளலாகும்.
4) இயற்கையான தன்மை எடுத்துக்காட்டப்படும் விதத்தில் வர்ணம் தீட்டுதலாகும்.
5) உயிர்த்துப்புடன் கூடிய ரோகையைக் கையாளுதலாகும்

(..........)

(19) சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட 'யோகி வடிவ' சிலையினால்,

1) சிந்துவெளி நாகரிகத்தில் யோகிகள் இருந்தமைக்கான தகவல்கள் கிடைக்கின்றன.
2) இந்நாகரிகத்தில் மொங்கோலியர்கள் வாழ்ந்தமைக்கான சான்று கிடைக்கப்பெறுகின்றது.
3) திராவிட வம்சாவளியினர் இங்கு வாழ்ந்தமைக்கான சான்று கிடைக்கப்பெறுகிறது.
4) இந்திய பாரம்பரியத்துக்குரிய மனிதனின் மாதிரி ஞாபகமூட்டப்படுகிறது.
5) தியானத்தில் ஈடுபட்டிருக்கும் யோகியொருவரின் உணர்ச்சிப் பண்புகள் வெளிப்படுத்தப் படுகின்றன.

(..........)

(20) இலங்கையின் பாரம்பரிய குகை ஓவியர்கள் மனிதர்களினதும் விலங்குகளினதும் உருவங்களை வரையும் போது

1) சுறுசுறுப்பினை எடுத்துக்காட்டி இயற்கையாக வரைவதற்கு முயற்சி செய்துள்ளனர்.
2) குறியீட்டு அடிப்படையில் எளிமையான அடிப்படை இயல்புகளை எடுத்துக்காட்டியுள்ளனர்.
3) உயிரியல் அளவை விடப் பெரிதாக்கி வரைவதற்கு முயற்சி செய்துள்ளனர்.
4) தொடர்பாடல் செயன்முறை ஒன்றிற்குப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தியுள்ளனர்.
5) பலாங்கொட மனிதனின் வாழ்வியலை எடுத்துக்காட்டுவதற்கு முயற்சி செய்துள்ளனர்.

(..........)

agaram.lk



Scanned with CamScanner

சிவனின் நடனத்தோற்றமான நடராஜர் சிலையால் வெளிப்படுவது

உலகின் தோற்றமும் அழிவும்

1) பிரபஞ்ச நடனம்
2) மனித உடலின் லயத்துடனான அசைவு
3) அறியாமையை அழித்தல்
4) நடனத்தின் தோற்றம்
5)

(............)

பெண் வடிவத்தின் உடல் வனப்பை எடுத்துக்காட்டும் கிரேக்கச்சிலை

1) நெ:.பேர்நிரி இராணி
2) தியோடோரா இராணி
3) நோ:.பெரட் இராணி
4) வீனஸ் தெய்வம்
5) அதீனா சிலை

(............)

மொஹஞ்சதாரோவில் அகழ்ந்தெடுக்கப்பட்ட நடனப்பெண் எனக் கருதப்படும் சிலையானது செய்யப்பட்டது

1) கல்லினால்
2) வெண்கலத்தால்
3) செம்மணற் கல்லினால்
4) சுண்ணாம்புக் கல்லினால்
5) சாம்பல் நிறக் கல்லினால்

(............)

5) "பிசாசு நடனக்காரரின் மகள்" என்பதை வரைந்த ஓவியர் உரு வரைபு ஓவியங்களை வரைவதிலும் புகழ்பெற்றவர். அவர் பெயர்

1) ஸ்ரான்லி அபேசிங்க
2) லயனல் வென்ற்
3) A.C.G.S. அமரசேகர
4) J.G. பேய்லிங்
5) J.D.A பெரேரா

(............)

❖ 36 – 40 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட படத்தைப் பயன்படுத்தி மிகப் பொருத்தமான விடையை தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.



agaram.lk

Scanned with CamScanner

(36) இங்கு காணப்படும் ஓவியம்

1) அகவய யதார்த்தவாத ஓவியமாகும்.
2) அருபவாதச் சித்திரமாகும்.
3) கன வடிவவாதச் சித்திரமாகும்.
4) மனப்பதிவுவாதச் (impressionism) சித்திரமாகும்.
5) பிற்பட்ட மனப்பதிவுவாதச் சித்திரமாகும்.

(..........)

(37) இச்சித்திரம் வரையப்பட்டது

1) எட்வேட் மனேயினால்
2) கமிலிஸ் பியாறோவினால்
3) கிளோட் மொனேயினால்
4) எட்கா டெகாவினால்
5) பியறே ஒகஸ்ட் றெனோவினால்

(..........)

(38) இச்சித்திரத்தை வரையும்பொழுது கலைஞரின் எண்ணமாக இருந்தது

1) சூரியன் பிரகாசிக்கும் தன்மையை இயற்கையாக வெளிப்படுத்துதல்
2) சூரியன் உதிக்கும்பொழுது ஒளியில் உடனடியாக ஏற்படுகின்ற மாறுபாடுகளின் இயல்பைச் சித்திரமாக வரைதல்
3) நீரின் மீது சூரிய ஒளி விழுந்துள்ள தன்மையை வெளிப்படுத்துதல்
4) அதிகாலையில் சூரிய ஒளி விழுவதால் நீர் மாறுபடுகின்ற தன்மையைக் காட்டுதல்
5) சூரியன் மறையும் சந்தர்ப்பத்தின் அழகை சித்திரமாக்குதல்

(..........)

(39) இச்சித்திரம் சலோனினால் தவிர்க்கப்பட்டதற்கான காரணம்

1) இதில் வடிவமைப்புக்களின் ஒழுங்கமைப்பு காணப்படாமையினால்
2) இயற்கையான சூரிய உதயத்தை வெளிக்காட்டும்போது பின்... வேண்டிய மரபுரீதியான பண்புகள் இங்கு காணப்படாமையினால்
3) நிச்சயமான வடிவமைப்பைக் காட்டுவதற்கு திறமையற்றமை...
4) சமமான வர்ணப் பயன்பாட்டுமுறை, நுட்பம் ஆகியன பய... ாமையினால்
5) உண்மையான நிகழ்ச்சி சித்திரத்தில் வெளிப்படுத்தப்படாமை...

(..........)

(40) இச்சித்திரம் தற்கால விமர்சகர்களின் வரவேற்பையும் பாராட்டையும் பெற்றதற்கான காரணம்

1) நீரின் மீது சூரிய ஒளி விழுகின்ற தன்மை இரசனையுடன் வெளிப்படுத்தப்பட்டிருப்பதால்
2) சூரிய உதயத்தில் ஒளியில் உடனடியாக ஏற்படுகின்ற மாறுபாடுகளின் இயல்பைப் புதிய தன்மையில் ஓவியமாக்கப்பட்டுள்ளமையால்
3) சூரிய உதயத்தில் வெளிப்படுகின்ற அழகைக் கடும் வர்ணத்தின் தடிப்பான தூரிகைத் தடங்கள் மூலம் சித்திரமாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி என்பதனால்
4) கலைக்கூடத்திலிருந்து வெளிப்பட்டு இயற்கைத் தன்மைகளின் உண்மையை ஆராய்வதற்கு எடுக்கப்பட்ட முயற்சி என்பதனால்
5) சூரிய உதயம் பற்றிய கலைஞரின் உள்ளத்தில் உருவான சௌந்தரியம் யதார்த்த முறையில் சித்திரத்தில் வரையப்பட்டுள்ளமையால் (..........)

(40 x 1 = 40 புள்ளிகள்)

agaram.lk

Scanned with CamScanner

## பகுதி – II

### உப பகுதி - 'அ'

### (சித்திரக்கலை மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

(1) கீழைத்தேய, மேலைத்தேய தழுவல்களுடன் சில ஓவியர்கள் கொழும்புநகர் காலத்தில் பௌத்த விகாரை சுவர் ஓவிய மரபிற்கு புத்துயிர்ப்பளித்தனர்.

i) M. சார்ரிலிசின் ஓவியங்கள் காணப்படும் நான்கு விகாரைகளின் பெயரினைக் குறிப்பிடுக.

ii) கேமமாலா தந்தகுமாரன் புனித தந்ததாதுவைக் கொண்டு வரும் புதிய களனி விகாரை ஓவியத்தில் காணப்படும் கீழைத்தேய பண்புகளைச் சுருக்கமாக குறிப்பிடுக.

iii) M. சார்ரிலிசும், ஜோச்கீட்டும், சுவரோவிய மரபில் மேலைத்தேய பண்புகளை கையாண்ட விதத்தை ஒப்பிட்டு விமர்சிக்குக.

(2) இந்திய தூபிகளை பின்பற்றி இலங்கை தாதுகோபங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமை இரு தூபிகளையும் அவதானிக்கும்போது புலனாகிறது.

i) இலங்கை தாதுகோபுரங்கள் நிர்மானிக்கப்பட்ட 4 வடிவங்களைக் குறிப்பிடுக.

ii) வாகல்கடத்தில் காணப்படும் அழகியல் பண்புகளை சுருக்கமாக மதிப்பிடுக.

iii) றுவான் வெலிசாய தாதுகோபம் பெருமளவு சாஞ்சி தூபியின் அமைப்பினை ஒத்துள்ள போதிலும் வேறுபாடான அம்சங்களையும் கொண்டுள்ளதாக விமர்சிக்கப்படுகின்றது. இக் கூற்றினை தெளிவுபடுத்துக.

### உப பகுதி - 'ஆ'

### (சித்திரக்கலை மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

(3) சிந்துவெளி நாகரிகத்திற்குரிய படைப்புக்கள் அவர்களின் பல்லூடக பயன்பாட்டினை வெளிப்படுத்துகிறது.

i) சிந்துவெளி மக்கள் சிற்பங்களை வடிவமைக்கப் பயன்படுத்திய கற்கள் நான்கினைக் குறிப்பிடுக.

ii) சிந்துவெளி மக்களிடம் காணப்பட்ட உலோக ஊடக பயன்பாடு தொடர்பாக சுருக்கமான விமர்சனத்தை முன்வைக்குக.

iii) கற்சிற்பங்களில் அவயவங்கள் பொருத்தும் நுட்பமுறைகளை சிந்துவெளி மக்கள் கையாண்ட விதத்தினை உதாரணத்துடன் விமர்சிக்குக.



agaram.lk
Scanned with CamScanner

(4) சாஞ்சி தூபி வேலைப்பாடுகள் பௌத்த கலைப்படைப்புக்கள் பலவற்றைக் கொண்ட உயரிய நிர்மாணமாகும்.

i) சாஞ்சி தூபியின் கல்வேலி காணப்படும் 3 இடங்களைக் குறிப்பிடுக.

ii) சாஞ்சிவாயில் தோரணத்தின் அழகியல் அம்சங்களைச் சுருக்கமாக மதிப்பிடுக.

iii) சாஞ்சி தோரணத்தில் செதுக்கப்பட்டுள்ள "யட்டிலதனய" (பிராமணரின் ஆணவத்தை அடக்குதல்) என்ற சிற்பத்தை மதிப்பீடு செய்க.

## உப பகுதி - 'இ'

## (சித்திரக்கலை மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

(5) மறுமலர்ச்சிக்கால ஐரோப்பிய கலைஞர்கள் சிற்பம், ஓவியம், பொறியியல், மருத்துவம் சார்ந்த பல்திறமைசாலிகளாக திகழ்ந்தனர்.

i) மைக்கல் அஞ்சலோவினால் வடிவமைக்கப்பட்ட மூன்று கட்டடங்களின் பெயரினைக் குறிப்பிடுக.

ii) லியானோடாவின்சியின் மொனோலீசா ஓவியத்தின் ஊடகப் பயன்பாடு, ஒளிநிழல் பிரயோகம், உணர்வு வெளிப்பாடு தொடர்பாக சுருக்கமான மதிப்பீட்டினை முன்வைக்குக.

iii) மைக்கல் அஞ்சலோவின் சிற்பப் புலமையை சிறப்பாக வெளிப்படுத்தும் பியற்றா சிலையினை மதிப்பீடு செய்க.

(6) வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதர்களினால் வரையப்பட்ட சித்திரங்கள் ஐரோப்பாவில் பல பிரதேசங்களிலும் பரந்து காணப்படுகின்றது.

i) தாம் வாழ்ந்த குகைகளில் இச் சித்திரங்களை வரைந்தமைக்கான காரணங்கள் நான்கு தருக.

ii) விலங்குருவங்களைச் சித்தரிப்பதில் அல்ரா - மீரா கலைஞர்கள் சிறப்பான தேர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளனர் சுருக்கமாக விளக்குக.

iii) லாஸ்கோஸ் குகையில் வரையப்பட்டுள்ள சித்திரங்களில் காணக்கூடிய சிறப்பான சித்திர உத்திமுறைகளை உதாரணத்துடன் விமர்சிக்குக.

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

தவணைப் பரீட்சை, மார்ச் - 2016

Term Examination, March - 2016

| தரம் :- 12 (2017) | சித்திரக்கலை - II | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி – II


மேற்பார்வையாளருக்குரியது

### நிலைப்பொருட்கூட்ட வரைதல்

ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய பொருட்கள்

1. பெட்டி
2. பந்து
3. சீத்தை துணி
4. ஐந்தூரியச்செடி பூச்சாடியுடன்

agaram.lk



(100 புள்ளிகள்)



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, மார்ச் - 2016
# Term Examination, March - 2016

FWC

| தரம் :- 12 (2017) | சித்திரக்கலை - III | நேரம் :- 3.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

## பகுதி – III

கவனிக்க.

- நீங்கள் ஒரு சித்திரத்தை மாத்திரம் வரைய வேண்டும்.
- விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் ஒப்படைக்கும்போது உங்கள் சித்திரம் நன்றாக உலர்ந்திருத்தல் வேண்டும். ஈரமான சித்திரங்கள் ஒன்றோடொன்று ஒட்டிக் கொள்ளுதல் உங்களுக்குப் பிரதிகூலமாக அமையலாம்.
- வர்ணந்தீட்டுவதற்கு நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், பெஸ்ரல் வர்ணம் உட்பட கையில் ஒட்டிக் கொள்ளாத எவ்வகை வர்ண ஊடகத்தையும் பயன்படுத்தலாம். (பெல்ற் பேனையைப் பயன்படுத்துதல் உகந்ததன்று)
- வரைதற்கு வெள்ளைத்தாளும் தேவையானவர்களுக்குத் திசுத்தாளும் வழங்கப்படும்.

❖ **பகுதி அ, ஆ, இ ஆகிய பகுதிகளிலிருந்து ஒரு தலைப்பை மாத்திரம் தெரிவு செய்க.**

agaram.lk

### "அ" பகுதி - சித்திர ஒழுங்கமைப்பு

(1) பௌர்ணமி தினத்தன்று இரவில் இறைவனுக்குப் பூஜைகள் செய்யும் பக்தர்கள்.

(2) விவசாய நிலம் ஒன்றில் அல்லது வேலைத்தளம் ஒன்றில் வேலையில் ஈடுபடும் தொழிலாளர்கள்.

(3) கொன்றை மரத்தின்கீழ் நீராடுதுறையில் நீராடும் கிராமியச் சிறுவர்கள்.

### "ஆ" பகுதி - அலங்கார ஆக்கம்

(4) சிறுவர் உடை தைப்பதற்கு ஏற்ற சீத்தைத் துணிக்குப் பொருத்தமான சிறுவர் கார்டூன் பாத்திரம் ஒன்றைப் பயன்படுத்தி பரவுருப அலங்காரம் ஒன்றை நிர்மாணிக்க.

(5) நீள் சதுர வடிவமைப்புடைய மேசைத்துணி ஒன்றிற்குப் பொருத்தமாக முழுத்தள அலங்காரம் பாரம்பரிய அலங்கரிப்பு அலங்காரத்தன்மையில் நிர்மாணிக்க.

(6) சதுரமான குஷன் கவர் ஒன்றிற்கு கேத்திரகணித வடிவத்தைப் பயன்படுத்தி ஆக்கம் ஒன்றைச் செய்க.

### "இ" பகுதி கிறபிக் சித்திரம்

(7) "வியத்தகு நாளைய நாள்" என்னும் தலைப்பின் கீழ் அழகான சுவரொட்டி ஒன்றை நிருமாணிக்க.

(8) பாடசாலை இல்ல விளையாட்டு விழாவின் பொருட்டு தயாரிக்கும் நினைவுமலர் ஒன்றின் வெளியட்டைக்குப் பொருத்தமான ஆக்கம் ஒன்றை வரைக.

(9) பால் மா வகை ஒன்றை விளம்பரம் செய்வதன் பொருட்டு வியாபார நிலையங்களில் தொங்க விடுவதற்குப் பொருத்தமான காற்றில் அசைவை ஏற்படுத்துகின்ற பிரச்சார விளம்பரம் ஒன்றைத் திட்டமிடுக.

Scanned with CamScanner

சித்திரக்கலை | புள்ளித்திட்டம்

தரம் :- 12 (2017)

சித்திரக்கலை I - 100 புள்ளிகள்
சித்திரக்கலை II - 100 புள்ளிகள்
சித்திரக்கலை III - 100 புள்ளிகள்

இறுதிப் புள்ளி = $100 + 100 + 100 = 300$
$300 \div 3$
= 100 புள்ளிகள்

சித்திரக்கலை I - பகுதி - I = 40 புள்ளிகள்
பகுதி - II = $20 \times 3 = 60$ புள்ளிகள்

## பகுதி - I

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 11) | 2 | 21) | 2 | 31) | 1 |
| 02) | 4 | 12) | 4 | 22) | 3 | 32) | 1 |
| 03) | 3 | 13) | 1 | 23) | 3 | 33) | 4 |
| 04) | 3 | 14) | 3 | 24) | 4 | 34) | 2 |
| 05) | 2 | 15) | 2 | 25) | 3 | 35) | 3 |
| 06) | 2 | 16) | 5 | 26) | 4 | 36) | 4 |
| 07) | 2 | 17) | 3 | 27) | 1 | 37) | 3 |
| 08) | 3 | 18) | 3 | 28) | 3 | 38) | 2 |
| 09) | 3 | 19) | 5 | 29) | 2 (C, E) | 39) | 2 |
| 10) | 2 | 20) | 3 | 30) | 5 | 40) | 2 |

($40 \times 1 = 40$ புள்ளிகள்)

## பகுதி - II

01) உப பகுதி 'அ'

(i)
- கொழும்பு மாலிகாகந்த விகாரை
- கரகம்பிட்டிய சுபோதராமய
- மத்துகம பாத்திய சிறி மங்கல்ராமய
- பொத்துபிட்டிய, பூஜாராமய

(4 புள்ளிகள்)

(ii)
- சிகிரிய ஓவியத்தை ஒத்த வர்ணப்பிரயோகம், ரேகை பயன்பாடு
- மஞ்சள், செம்மஞ்சள், வெள்ளை, கபிலம் ஆகிய வர்ணங்கள் அதிகம் பாவிக்கப்பட்டுள்ளது
- கீழைத்தேய ஆடை ஆபரணங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளது
- பண்டைய பிராமண ஆடையமைப்பு வெளிப்படுத்தி காட்டப்பட்டமை

(6 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

(iii) M. சார்ரிலிஸ், ஜோர்ச்கீட்டும் விகாரை சுவரோவியப் பண்பில் மேலைத்தேய பாணிகளை கைக்கொண்டமை

M. சார்ரிலிஸ் மேலைத்தேய மறுமலர்ச்சிக்கால யதார்த்த பாணியையும், ஜோர்ச்கீட் பிக்காசோவின் கனவடிவவாத பாணியையும் கைகொண்டனர்

இரு ஓவியர்களும் விகாரைகளில் புத்த சரிதைக்கு முக்கிய இடம் வழங்கினர்

M. சாரிலிஸ் ஓவியங்களில் மேலைத்தேய பூங்கா அமைப்புக்களையும் கீழைத்தேய ஆடை அமைப்புக்களை காணக்கூடியதாக உள்ளது

ஜோர்ச்கீட்டின் கோதமி விகாரை ஓவியத்தில் வரையப்பட்டுள்ள மாராபராஜ ஓவியத்தில் மாரனின் ஆட்களில் அமைப்பு பிக்காசோவில் பல்தொகுப்பு கியூபிச முறையை ஒத்துள்ளது.

(10 புள்ளிகள்)

02)

(i) நீர்க்குமிழி வடிவம், மணிவடிவம், தாணியக்குவியல் வடிவம், பானைவடிவம், நெல்லிக்கனி வடிவம், தாமரை வடிவம் (4 புள்ளிகள்)

(ii)
- ✶ வாகல்கடத்தில் அழகானது
- ✶ வாகல்கடத்தில் இருபக்கதிலும் தூண்கள் காணப்படும்
- ✶ தூண்களில் ஜீவன விருஷ்டச அலங்காரமும் உச்சியில் விலங்கு உருவமும் காணப்படும்
- ✶ வாகல்கடத்தின் மத்திய பகுதி கல்வரிசை அமைப்பும் அதில் யானை குள்ள வடிவமும் காணப்படும்
- ✶ வாகல்கடத்தில் மேற்பகுதி விமான அமைப்பை கொண்டிருக்கும் அவை செங்கல்லால் ஆக்கப்பட்டிருக்கும் விமானத்தில் உட்புறத்தில் தேவ தேவியர் வடிவமும் ஓவியங்களும் காணப்படும். (6 புள்ளிகள்)

(iii) நுவான்வெலிசாய தாதுகோபத்திற்கும் சாஞ்சி தூபிக்கும் இடையிலான ஒற்றுமையான பண்புகள்
- ✶ நீர்குமிழி வடிவம்
- ✶ முத்தட்டு வளையலுக்கு பதிலாக மேலதிக அமைப்பு
- ✶ சதுரகோட்டத்திற்கு பதிலாக ஹர்மின் அமைப்பு
- ✶ கலசகொத்து பகுதிக்கு பதிலாக யஷ்டிய என்ற அமைப்பு
- ✶ கலசத்திற்கு பதிலாக குடை அமைப்பு
- ✶ வாகல்கடத்திற்கு பதிலாக வாயில் தோரண அமைப்பு காணப்படும்
- ✶ வேதிகை (மதில்) பதிலாக கல்வேலி அமைப்பு காணப்படும்
- ✶ நுவான்வெலிசாய தாதுகோபத்தில் காணப்படும் தேவர் மேடை பகுதிக்கு பதிலாக சாஞ்சி தூபியில் மாதிரி பகுதிகள் காணப்பட்டவில்லை (10 புள்ளிகள்)

உப பகுதி 'ஆ'

03)

(i) செம்மணல்கல் (சிவப்பு மணல்கள்), சாம்பல் நிறக்கல் சுண்ணக்கல், வெண்மணற்கல் (பாற்கல்) (4 புள்ளிகள்)

(ii)
- ✶ சிந்துவெளி மக்கள் உலோகங்களை பல்வேறு தேவைகளுக்கு பயன்படுத்தி உள்ளார்கள்
- ✶ பாவனைப்பொருட்கள், ஆபரணங்கள், சிலைகள் என்பன உலோகத்தால் ஆக்கப்பட்டது
- ✶ வெண்கலம் போன்ற கலப்பு உலோகம் பயன்படுத்தப்பட்டுள்ளது
- ✶ வார்ப்பு நுட்பமுறையை பயன்படுத்தி சிற்பங்களை உருவாக்கியுள்ளனர்
- ✶ தலைப்பட்டி, கை தாயத்து போன்றன உலோகத்தில் ஆக்கப்பட்டுள்ளது
- ✶ மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட நடனப் பெண் சிலை வெண்கல வார்ப்பு சிற்பமாகும் (6 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner

(iii) ✶ ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள் அவயவங்கள் பொருத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது

✶ இம்முறை சிற்பக்கலையின் முன்னேற்றமான தன்மையை காட்டுகிறது

✶ அவயவங்கள் பொருத்துவதற்கான பொருத்துகள் காணப்படுவதன் ஊடாக இத்திறனை அறிந்து கொள்ளலாம்

✶ ஆண்முண்ட சிலை, நாட்டியக்காரன்சிலை என்பன இதற்கு சிறந்த உதாரணமாகும்

✶ இச்சிலைகளில் தோள்களில் காணப்படும் அசாதாரண உருவம் மேலும் இரு கைகள் பொருந்துவதற்கான அடையாளமாகும் (நான்கு கைகள்)

(10 புள்ளிகள்)

(i) ✶ அடித்தளத்தில் காணப்படும் கல்வேலி

✶ மேதியவில் காணப்படும் கல்வேலி

✶ ஹர்மிகா என அழைக்கப்படும் கல்வேலி

(3 புள்ளிகள்)

(ii) ✶ இரு நிலைக்குத்தான தூண்களின் மீது மூன்று குறுக்குத் தூண்கள் பொருந்துமாறு வாயில் தோரணம் நிர்மாணிக்கப்பட்டது

✶ குறுக்குத் தூணின் அந்தங்களில் பனையோலை வடிவ சுருள் அமைப்பு காணப்படுகின்றது

✶ தோறணத்தின் உச்சியில் தர்மச்சக்கரம் காணப்படுகிறது

✶ நிலைக்குத்து தூண் குறுக்கு தூணை சந்திக்கும் இடங்களில் ஒவ்வொரு திசையிலும் காணப்படும் தோறணங்கள் பின்வரும் நான்கு வடிவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது அவை யட்சகி, யானை, குள்ள, சிங்கவடிவங்களாகும்.

✶ நிலைக்குத்து, குறுக்குத்தூண்கள் முழுமையாக சிற்பங்களால் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

✶ சிற்பங்கள் யானைத்தந்த செதுக்கல்கள் போல் காணப்படுகின்றது

(7 புள்ளிகள்)

(iii) ✶ காஞ்சி கிழக்கு வாயில் தோரணத்தில் செதுக்கப்பட்டுள்ளது

✶ புத்தசரிதையை காட்டும் செதுக்கல் - புத்த உருவத்திற்கு பதிலாக குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது.

✶ புத்தர் பிராமணரின் ஆணவத்தை அடக்கும் முகமாக ஆற்றில் இறங்கி நீரில் மிதக்கும் விதம் காட்டப்பட்டுள்ளது.

✶ இதில் புத்தருக்கு பதிலாக குறியீடு காட்டப்பட்டுள்ளது.

(10 புள்ளிகள்)

## உப பகுதி 'இ'

(i) இரண்டாம் யூலியஸ் (போப்) பாப்பரசரின் கல்லறை மனை உரோம் புனித பீற்றர் ஆலயம்
மெடிசி குடும்ப கல்லறை

(3 புள்ளிகள்)

(ii) கன்வஸ்துணியில் தைல வர்ணம் கொண்டு பூர்த்தியாக்கப்பட்டுள்ளது
சையிரஸ் கியுரோ ஒளிநிழல் பிரயோகம் காட்டப்பட்டுள்ளது பாவ வெளிப்பாடு சிறப்பானது (புன்சிரிப்பு)
எளிமையூடாக அழகு வெளிப்படுத்தப்பட்டுள்ளது

(6 புள்ளிகள்)

(iii) சலவைக் கல்லில் உருவாக்கப்பட்ட பியற்றா சிலையில் வெளிப்பாடு, பாவ வெளிப்பாடு, ஆடையமைப்பின் சிறப்பு, ஊடக கையாளுகை பற்றி குறிப்பிட வேண்டும்

(10 புள்ளிகள்)



agaram.lk
Scanned with CamScanner

06)

(i) ✶ வேட்டை நன்கு கிடைக்கும் என்ற நம்பிக்கை

✶ வேட்டையாடுதல் பற்றிய கற்றல்

✶ பொழுதுபோக்கு

✶ அழகியல் உணர்வில் வெளிப்பாடு

✶ தமது முதாதயர்களை நினைவுபடுத்தல்

(4 புள்ளிகள்)

(ii) அல்ரா மீராக் கலைஞர்கள் விலங்குருவங்களை பல்வேறு அசைவுகளில் காட்டியுள்ளனர் பைசான் எருதுகளின் ஓவியங்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றது பைசான் எருதுகள் சண்டை செய்தல், சண்டைக்கு தயாராகுதல், முக்காரம் இடல், ஓய்வு எடுத்தல் போன்ற பல்வேறு நிலைகளில் காட்டப்பட்டுள்ளமை

(6 புள்ளிகள்)

(iii) பிரமாண்டமான தன்மை உதாரணம் 18 அடி நீளமான பைசான் எருது

பல்வேறு அசைவு நிலையில் காட்டியமை

குகையின் மேற்பரப்பை பொருத்தமாக பயன்படுத்தியமை

முப்பரிமான வர்ணந்தீட்டுகை

பொருத்தமான வர்ணத் தெரிவு

புரிமாண விதிகள் பேணப்பட்டமை

செய்தியை சொல்லும் விடயங்கள் சித்திரமாக்கப்பட்டமை

உதாரணம் :- (இறந்த மனிதனின் பராமரிப்பு)

(10 புள்ளிகள்)

agaram.lk



Scanned with CamScanner